C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்

# மன்னா..

பொழிவு : 17 MARCH 2025 ஆகாரம் : 03

*நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் இடத்தில் திரும்புங்கள்.*

*யோவேல் 2:13*



# UPCOMING EVENTS

**01 Mar '25** — Saturday
10:30am
**FASTING PRAYER**
Parsonage - C.S.I. Tamil Parish Alain

**All Tue Mar '25** — Tuesday
7:30pm
**COTTAGE PRAYER**
Church Members House

**All Tue & Fri Feb '25** — Tue & Friday
5:00pm - 06:00pm
**TAMIL CLASS**
Parsonage - C.S.I. Tamil Parish Alain

**All Wed Mar '25** — Wednesday
7:30pm
**BIBLE STUDY & PRAYER**
Parsonage - C.S.I. Tamil Parish Alain

**05 Mar '25** — Wednesday
7:30pm - 09:30pm
**ASH WEDNESDAY SERVICE**
Ark Hall -Evangelical Church Campus Kanad hospital - Al Ain

**1 & 15 Mar '25** — Saturday
7:30pm - 09:30pm
**HOLY COMMUNION SERVICE**
Evangelical Church Campus Kanad hospital - Al Ain

**08 Mar '25** — Saturday
7:30pm - 09:30pm
**WOMEN'S FELLOWSHIP SERVICE**
Evangelical Church Campus Kanad hospital - Al Ain

**22 Mar '25** — Saturday
7:30pm - 09:30pm
**EVENING SERVICE**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**24-28 Mar '25** — Mon to Friday
TBD
**VACATION BIBLE SCHOOL**
TBD

**29 Mar '25** — Saturday
7:30pm - 09:30pm
**VACATION BIBLE SCHOOL PROGRAM & SERVICE**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**30 Mar '25** — Sunday
10:30am - 02:30pm
**MINISTRY LEADERS RETREAT**
Kanad hospital Majlis - Al Ain

**All Sat Mar '25** — Saturday
6:30pm - 7:30pm
**CHILDREN BIBLE SCHOOL**
Evangelical Church Campus Kanad hospital - Al Ain

**All Sun Mar '25** — Sunday
5:00 pm
**OUT REACH MINISTRY - CAMP**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

அன்பிற்கினியவர்களே, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் நல்வாழ்த்துக்கள்.




சாம்பல் புதன் தொடங்கி உயிர்த்தெழுந்த திருநாள் வரையில் (EASTER) உள்ள 40 நாட்கள் (ஞாயிறு நீங்கலாக) உபவாச காலம், நோன்பு காலம், வசந்த காலம், லெந்து காலம் என்று உலகளாவிய கிறிஸ்தவர்களாக, நாமும் கடைப்பிடிக்கிறோம். இது கிபி 325 – இல் நிசேயா நகரில் கூடிய திரு அவையில் லெந்து காலம் என்று கிறிஸ்தவர்கள் கடைப்பிடிக்க தீர்மானிக்கப்பட்டது.

**வசந்த காலம்:**

கிறிஸ்தவர் ஒவ்வொருவருக்கும் இது வசந்த காலமே.வாழ்வில் பாவமான, தீமையான அனைத்தையும் களைந்து தன்னை புதுப்பித்துக் கொள்ளுகிற காலம். உடலையும், உள்ளத்தையும் தூய்மைப்படுத்திக் கொள்ளுகிற,சுய ஆய்வு செய்கின்ற காலம்.கடவுளுடன் நெருங்கி வாழ்ந்து, அவரது வழியில் செயல்படும் காலமே உபவாசம் ஆகும். (உபவாசம் = உப என்றால் அருகில், வாசம் என்றால் வாழ்வது என்பதாகும்) கடவுளை நெருங்கி வாழ்ந்து உலகில் செயல்படுகின்ற காலமே லெந்து காலம்.

**மூன்று தூண்கள்:**

இறைவேண்டல், உண்ணா நோன்பு, தர்மச் செயல்கள் இவையே லெந்து காலத்தின் தூண்கள் ஆகும். திருமறையில் மோசே சீனாய் மலையில் இரவும் பகலும் 40 நாட்கள் இருந்தார், கடவுளின் கட்டளைகளை மக்களுக்கு பெற்றுத் தந்தார். (யாத்திராகமம் 24:11) ஆண்டவர் இயேசு கிறிஸ்து வனாந்தரத்தில் 40 நாட்கள் உபவாசம் இருந்தார். (மத்தேயு 4:1) பின்னரே திருப்பணியைத் தொடங்கினார். எனவே கிறிஸ்தவர் ஒவ்வொருவரும் லெந்து காலத்தை சரியாகக் கடைபிடித்து, ஆண்டவருக்கு மாட்சியாய், சாட்சியாய் வாழ்வோம்.

**விடுதலை வாழ்வு:**

இந்த லெந்து காலத்தில் அக்கிரமங்கள் அனைத்தையும் விட்டொழிப்போம், (ஏசாயா 58:6) எளியவரை நினைத்து, உணவளிப்போம், அவர்களின் தேவைகளை சந்திப்போம் அதுவே மெய்யான உபவாசம் (ஏசாயா 58:7) ஆகும். இதனை இயேசு கிறிஸ்து, மத்தேயு 25:40–ல் இந்த சிறியவருள் ஒருவருக்கு எதைச் செய்தீர்களோ,அதை எனக்கே செய்தீர்கள் எனக் கூறுகிறார்.இப்படிச் செய்யும் போது நமது கூப்பிடுதலுக்கு பதில் உறுதியாக கிடைக்கும் (ஏசாயா 58:8–10) கர்த்தர் நித்தமும் நடத்துவார்.நீ நீர்பாச்சலான தோட்டம்,வற்றாத நீரூற்றாக ஆசீர்வதிக்கப்படுவாய். (ஏசாயா 58:11) என்ற இறைவாக்கு உறுதியாக செயல்படுகிறவர்களின் வாழ்விலும் நிறைவேறும். இதுவே உண்மையான உபவாசம் சிந்திப்போம், செயல்படுவோம்.


**நிறைவாக**

மனிதரின் நிலையாமை, இயலாமை, செயலாமை, முயலாமை என்ற சுயநலம் சார்ந்த வாழ்வில் அல்ல.மாறாக, திருமறை வழியாக ஆண்டவர் இயேசுவின் பாதச்சுவடுகளை பின்பற்றி இந்த வசந்தகாலமாம் லெந்து காலத்தை பொருள் பொதிந்ததாக்கி ஒவ்வொரு கிறிஸ்தவரும் முனைப்புடன் செயல்படுவோம். இது உடலை வருத்திக் கொள்கின்ற காலம் அன்று,உள்ளத்தை திருத்திக் கொள்கின்ற காலம். நமது சிந்தனைக்கான கேள்வி,மேற்கண்ட படி நான் எப்போது உபவாசம் இருந்தேன்?

இறைப்பணியில்,

ஆயர்.

*Rev. S.Baktha Thiyagarajan*




## மன்னா பிப்ரவரி - 25 மீள்பார்வை...




ஆண்டவர் இயேசுவுக்கே மகிமை. கடந்த பிப்ரவரி 25 மன்னா ஒரு பல் சுவை இதழ் ஆகும். பக்கம் 3ல் இரண்டு காசு போட்ட விதவைக் கட்டுரையில் உதாரத்துவமாக நம்மையும் நமக்கானதையும் கொடுக்க வேண்டும் என்பதனையும், பக்கம் 5ல் செயலர் மடலில், திருமறையின் இறைவார்த்தையே வாழ்வின் அடித்தளம் என்றும், பக்கம் 7ல் THE CIRCLE OF IMPACT கட்டுரையில் ஜெபம், ஐக்கியம், வாழ்வின் செயல்பாடுகள் ஒவ்வொன்றிலும், உலகிற்குள் ஒவ்வொருவரும் உப்பாக,ஒளியாகத் திகழ வேண்டும் என்றும்,பக்கம் 10ல் ரூத் வாழ்வின் வழியாக நமது விசுவாசத்தை மீண்டும் மறுக்கட்டுமானம் செய்ய வேண்டும் என்றும், பக்கம் 13ல் சீமோன் பேதுருவின் உணர்வின் வெளிப்பாடும், குழந்தைத்தனமான வெளிப்படையான வாழ்வையும், பக்கம் 16ல், THE BROKEN HEART என்ற கட்டுரையில், உடைந்த இருதயத்தை ஆண்டவர் இயேசு ஏற்று நிறைவாய் வழி நடத்துகிறார் என்றும்,பக்கம் 17ல் THE LOST COIN பகுதியில், நாணயம் இழந்து போனதை கண்டு பிடித்த சகோதரியின் மகிழ்வும், பாவியின் மனம் திரும்புதலினால் பரலோகில் உண்டாகும் பெரும் மகிழ்வும், தொடர்ந்து பிள்ளைகளின் திருமறைச் சார்ந்த புதிர்கள் அனைத்தும் நேர்த்தியானவையே. (குறிப்பு: பக்கம் 16ல் உள்ள ARTICLE WRITTEN BY, NAMELESS PERSON. NOT YOUTH FELLOWSHIP ARTICLE எழுதியுள்ள அனைத்து அன்பர்களுக்கும் உளமார்ந்த வாழ்த்துக்கள், கடவுள் ஆசிர்வதிப்பாராக.

இறைப்பணியில்,

ஆயர்.



யோவான் 4:4—30; 39—42

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் அனைவருக்கும் வாழ்த்துக்களையும் ஸ்தோத்திரங்களை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊருக்கே முதன் முதலில் நற்செய்தியை அறிவித்தப் பெண்ணாகிய சமாரிய ஸ்திரீயைக் குறித்து நாம் சிந்திப்போம்.

சமாரியா என்பது அசீரிய ராஜா (1இரா 16:24) இஸ்ரவேலரை சமாரியாவில் இருந்து சிறை பிடித்தார். பின்னர் புற இனத்தவரை சமாரியாவிலேயே குடியேற்றினார். சமாரியாவில் உள்ள மக்கள் கர்த்தரை வழிபடாமல் பாகாலை வழிபட்டு வந்தனர்.எனவே இஸ்ரவேலர் சமாரியரை ஒதுக்கி வைத்தனர், அவர்களைத் தீண்டத் தகாதவர்களாக எண்ணினர்.

இந்த நிலையில் தான் இயேசு கிறிஸ்து சமாரியாவுக்குள் யாக்கோபின் கிணற்றருகே செல்கிறார். அங்கே சமாரிய ஸ்திரீ தண்ணீர் எடுக்க வருகிறார், ஆண்டவர் இயேசு அவரை சந்திக்கிறார்.

**கிணற்றருகே உரையாடல்: (யோவான் 4:4—27)**

இயேசு: தாகத்துக்குத் தா என்றார்.

சமா.ஸ்திரீ: நீர் யூதனாக இருக்க என்னிடத்தில் தாகத்திற்குத் தா என்று கேட்பது எப்படி என்றாள்.

இயேசு: உன்னிடத்தில் தண்ணீர் கேட்பவர் யார் என்று தெரிந்தால், நீ அவரிடம் கேட்டிருப்பாய், நான் உனக்கு ஜீவத்தண்ணீரை கொடுத்திருப்பேன் என்றார்.

சமா.ஸ்திரீ: தண்ணீர் எடுக்க உம்மிடம் பாத்திரம் இல்லை, கிணறும் ஆழமாக உள்ளது பின்னர் எங்கிருந்து ஜீவத்தண்ணீர் உண்டாகும். இந்த கிணற்றைத் தந்த யாக்கோபை விட நீர் பெரியவரோ?

இயேசு: இந்த தண்ணீரை குடிக்கிறவர்களுக்கு மீண்டும் தாகம் உண்டாகும்.நான் கொடுக்கும் தண்ணீரை குடிப்பவருக்கோ ஒரு காலமும் தாகம் உண்டாகாது.

சமா ஸ்திரீ: ஆண்டவரே எனக்குத் தாகம் உண்டாகாமலும், தண்ணீர் மோண்டு கொள்ள இங்கு வராமலும் இருக்க அந்த தண்ணீரை எனக்குத் தர வேண்டும்.

இயேசு: நீ போய் உன் புருஷனை அழைத்து வா.

சமா.ஸ்திரீ: எனக்கு புருஷன் இல்லை.

இயேசு: நீ சொல்வது சரிதான் உனக்கு ஐந்து புருஷர் இருந்தார்கள், இப்போது இருப்பதும் உனக்கு புருஷன் இல்லை.

சமா.ஸ்திரீ: ஆண்டவரே நீர் தீர்க்கதரிசி.

(குறிப்பு: இறையாளாளர்கள் இப்படி பல வகையில் கூறுகிறார்கள். ஐந்து புருஷர்கள் என்பதை 5 ஆகமங்கள் என்றும் அல்லது ஐந்து வகையான பாகால் என்றும் இப்போது வணங்கும் பாகாலும் கடவுள் இல்லை அல்லது ஐந்து புருஷர்களை குறிக்கலாம் என்றும் குறிப்பிடுகின்றனர்.)

குறிப்பாக இயேசு கிறிஸ்து சமாரிய ஸ்திரீயுடன் பேசுவதன் நோக்கம், சமாரியர்கள் ஒதுக்க பட்டவர்கள் அல்ல அதோடு அவர்கள் வணங்கும் தெய்வங்கள் சிலை வழிபாடு என்பதனையும்

இவற்றை தனி மனித நற்செய்தி ஊழியத்தில் இயேசு செய்கிறார்.

**ஊருக்குள் உரையாடல்: (யோ 4:28—30;39—42)**

சமா.ஸ்திரீ: எல்லாரும் வாங்க நான் செய்த எல்லாவற்றையும் ஒரு மனுஷன் எனக்கு சொன்னார்.

மக்கள்: அப்படியா ஆச்சரியமா இருக்குதே.

சமா.ஸ்திரீ: ஆமா, அவரை வந்து பாருங்கள். அவர் கிறிஸ்துதானோ?

மக்கள்: நாங்க எல்லாரும் வாரோம், வந்து பார்க்கிறோம்.

மக்கள்:சமாரிய ஸ்திரீயிடம் உன் சொல்லினிமித்தம் அல்ல,அவருடைய உபதேசத்தை நாங்களே கேட்டு, அவர் மெய்யாய் கிறிஸ்துவாகிய உலக ரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம். (யோவான் 4:42)

சமா.ஸ்திரீ: மிக்க மகிழ்ச்சி.

**திருச்சபைக்குள் உரையாடல்:**

இயேசு: உங்களுடைய செயல்பாடு எப்படி இருக்கிறது?

திருச்சபை: (அமைதி)

இயேசு: இந்த நற்செய்தியை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்கிறீர்களா?

திருச்சபை: (அமைதி)

இயேசு: திருமறையின் வார்த்தைகளை கேட்டு,அதனைப் பின்பற்றி வாழ்கின்றீர்களா?

திருச்சபை: (அமைதி)

**காதுள்ளவன் கேட்கக் கடவன்:**

இறையரசு கட்டப்பட என்னுடைய பங்களிப்பு என்ன என்றும்,எந்த நிலையில் இத்திருப்பணியை என்னால் செய்ய முடியும் என்பதையும், சிந்திப்போம். சீர்தூக்கிப் பார்ப்போம், செயல்படுவோம், ஆமென்.

இறைப்பணியில்,

ஆயரம்மா

*Mrs . P . Velanganni*



# செயலர் மடல்



கர்த்தருக்குள் பிரியமான திருச்சபை மக்களே உங்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள் கடந்த மாதம் முழுவதும் கண்ணின் மணி போல பாதுகாத்து வந்த தேவனுக்கு நன்றியை செலுத்துவோம் கடவுள் கிருபையால் நம்மை வழி நடத்தி சிறந்த முறையில் சர்ச் பிக்னிக் முடிக்க கிருபை செய்தார் கடந்த மாதம் முழுவதும் நன்மையும் கிருபையும் நம்மை தொடர்ந்ததற்காக நன்றி செலுத்துவோம். அதேபோல் அவுட்ரீச் மினிஸ்ட்ரி நன்றாக நடைபெற்று வருவதற்காகவும் நன்றி செலுத்துவோம். நம் திருச்சபையின் ஆயர் முன்னெடுப்பினால் நடைபெற்று வரும் இல்ல சந்திப்பு ஜெபக்கூடுவை மிகவும் நேர்த்தியாகவும் நல்ல முறையிலும் நடைபெற்று வருவதற்கும் தங்களுடைய பெரிதான வரவேற்பும் அன்பின் உபசரிப்பும் இன்னும் ஊழியத்தில் ஊக்குவிக்கிறதுக்காக கர்த்தருக்கு நன்றி செலுத்துவோம் இல்ல ஜெபக்கூடுகை காட்டேஜ் பிரேயர் இன்னும் மென்மேலும் எல்லா பகுதிகளிலும் எல்லா திருச்சபை மக்களையும் ஒன்றிணைக்க கூடிய கிளை ஜெபக்கூடுகள் நடைபெற கர்த்தர் தாமே உதவி செய்வாராக. அதேபோல் ஊக்கமாய் ஜெபித்து, உதாரணத்துவமாய் கொடுத்து எழுப்பி வரும் பூனே பள்ளி திருச்சபைக்காய் இறைவனிடத்தில் மன்றாடுவோம், அது திறம்பட கட்டி முடிக்க தேவனுடைய நாமம் மகிமைக்காக அநேகருக்கு அந்த ஆலயம் உபயோகமாய் விளங்க பிரார்த்தனை செய்வோம். அதேபோல் இம்மாதத்திலும் ஒரு சந்திக்க காலம் (உபவாசக காலம்) சாம்பல் புதன் முதல் பெரிய வெள்ளி வரை காலை 6 மணி முதல் ஆறு முப்பது வரை லெந்து கால தின தியானம் நமது திருச்சபையின் ஆயர் மூலமாக நடைபெற உள்ளது அதிலும் அனைவரும் பங்கு பெற்று பயனடைமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். உங்கள் சிந்தனைக்கு..

## திரும்புங்கள் கர்த்தரிடம்

எசேக்கியேல் 18:30 (21—30) இஸ்ரவேல் வம்சத்தாரே... கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்; நீங்கள் மனந்திரும்புங்கள், உங்களுடைய எல்லா மீறுதல்களையும் விட்டுத் திரும்புங்கள்

யோவேல் 2:12—13 நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக்கிழித்து உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்புங்கள்

மல்கியா 3:7 என்னிடத்தில் திரும்புங்கள், அப்பொழுது உங்களிடத்திற்கு திரும்புவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

## 1. தீச்செயலை விட்டு திரும்புங்கள் (பாவங்கள், தீவினை)

எசேக்கியேல் 18:21 துன்மார்க்கன் தான் செய்த எல்லாப் பாவங்களையும் விட்டுத் திரும்பி, என் கட்டளைகளையெல்லாம் கைக்கொண்டு, நியாயத்தையும் நீதியையும் செய்வானேயாகில், அவன் பிழைக்கவே பிழைப்பான், அவன் சாவதில்லை.

1இராஜாக்கள் 8:35(33—40) தங்கள் பாவங்களை விட்டுத் திரும்பினால், பரலோகத்தில் இருக்கிற தேவன் மழையைக் கட்டளையிடுவாராக
ஏசாயா 44:22 என்னிடத்தில் திரும்பு; உன்னை நான் மீட்டுக்கொண்டேன்

## 2. தீய வழியை விட்டு திரும்புங்கள் (துன்மார்க்கம், பொல்லா)

எசேக்கியேல் 18:27 துன்மார்க்கன் தான் செய்த துன்மார்க்கத்தைவிட்டு விலகி, நியாயத்தையும் நீதியையும் செய்வானேயாகில், அவன் தன் ஆத்துமாவைப் பிழைக்கப்பண்ணுவான்.

யோனா 3:10 நினிவே மக்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினர்.

## 3. தீமையை விட்டு திரும்புங்கள் (குற்றம், மீறுதல், தீங்கு, வஞ்சம்)

எசேக்கியேல் 18:30 இஸ்ரவேல் வம்சத்தாரே, நான் உங்களில் அவன வனை அவனவன் வழிகளுக்குத் தக்கதாக நியாயந்தீர்ப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்; நீங்கள் மனந்திரும்புங்கள், உங்களுடைய எல்லா மீறுதல்களையும் விட்டுத் திரும்புங்கள்;

ஏசாயா 59:20 மீட்பர் சீயோனுக்கும், யாக்கோபிலே மீறுதலைவிட்டுத் திரும்புகிறவர்களுக்கும் வருவார் என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் உங்களிடத்தில் வாசம் செய்ய,

உங்கள் மனம் புதிதாகிறதுனால மறுரூபமடைந்து கர்த்தருக்கேற்ற நடக்கையிலும் செய்கையிலும் சொல்லிலும் சிறந்து விளங்க எல்லாம் வல்ல இறைவன் இயேசு நமக்கு அருள் புரிவாராக ஆமென்.

**இறைப் பணியில்**

MR. SANTHOSH KUMAR

திருச்சபைச் செயலர்



# The Power of Prayer

## ஜெபத்தின் வல்லமை

கிறிஸ்துவுக்குள் பிரியமான அனைவருக்கும். நம்முடைய வாழ்க்கையில் ஜெபம் என்பது மிக முக்கியமாகும். ஜெபம் என்றால் என்ன? ஜெபம் என்பது நாம் தேவனிடத்தில் பேசுவது, அவர் நம்மிடத்தில் பேசுவது, அவரிடத்தில் நம் தேவைகளைச் சொல்லிக் பெற்றுக்கொள்வது. ஜெபம் என்பது ஒரு மகிமையான உன்னத உறவு. ஜெபம் என்பது நான் என் தேவனை எவ்வளவு நேசிக்கிறேன் என்பதின் வெளிப்பாடு. நான் அவரை அதிகமாக நேசிக்கிறேன், அன்பு கூறுகிறேன். எனவே, அவரோடு எப்பொழுதும் என்னுடைய நேரத்தை செலவிட, என்னுடைய எல்லா காரியங்களையும் அவரோட பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன், எல்லாவற்றையும் அவரிடம் கேட்டு செய்கிறேன். ஏனென்றால் எல்லாவற்றையும் அறிந்தவர் அவர்மாத்திரமே, அவரே நம் தகப்பன், நம் சகோதரர், நம் எஜமானர், நம் இரட்சகர், நம் மணவாளர், நம் தெய்வம். இந்த உறவைத்தான் நாம் ஜெபம் என்கிறோம்.

ஜெபத்தில் நாம் மாத்திரம் அவரோடு பேசுவது என்பது இல்லை. மாறாக அவர் நம்மோடு பேசுகிறார் என்பதும், நம்மோடு பேச வாஞ்சையோடு காத்திருக்கிறார் என்பதும் உண்மை. இந்த உறவு பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் உள்ள அன்பை காட்டிலும், நண்பனின் சிநேகத்தை காட்டிலும், கணவன் மனைவியின் அன்பின் நெருக்கத்தை காட்டிலும் மேலானது. இதை வருணிக்கவே முடியாது அனுபவிக்கத்தான் முடியும். ஜெபம் என்பது துன்பம் வரும் போது மட்டும் நாம் தேவனை தேடுவதோ அல்லது தேவைக்காக மாத்திரம் அவரிடம் வேண்டிக்கொள்வதற்கான நேரம் என்பதோ இல்லை. மாறாக இது அன்பின் உறவாகும். நான் அவரோடு கொண்டிருக்கும்,அவர் என்னோடு கொணாடிருக்கும் அன்பின் வெளிப்பாடுத்தான் ஜெபம். அகில உலகத்தையும் படைத்த தேவாதி தேவனும் கர்த்தாதி கர்த்தருமாகிய நம் ஆண்டவரோடு நமக்குள்ள அன்பின் உறவாகும். தான் உருவாக்கிய மனிதர்களோடு ஆண்டவர் உறவை வாஞ்சிக்கிறார், நம்முடைய நேசத்தை அவர் எதிர்பார்க்கிறார்.

எசே.22:30 "நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே, நிற்கவும், சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுசனை தேடினேன் ஒருவனையும் காணேன்" என்று ஆண்டவர் சொல்லுகிறார். ஜெபிக்கிற ஒரு மனிதனாலேதான் தேசம் அழிந்து போகாதபடிக்கு திறப்பிலே நின்று ஜெயிக்க முடியும் 2நாளா 7:13,14 நான் மழை இல்லாதபடிக்கு வானத்தை அடைத்து அல்லது தேசத்தை அழிக்க வெட்டுக்கிளிகளுக்குக் கட்டளையிட்டு அல்லது என் ஜனத்திற்குள் கொள்ளைநோயை அனுப்பும் போது என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களை தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தை தேடி தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால் அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன் என்று ஆண்டவர் சொல்கிறார் எனவே தேசத்தை அழிவிலிருந்தும், கொள்ளை நோயிலிருந்தும் காப்பாற்றவும், அழியும் ஆத்துமாக்களுக்காக திறப்பிலே நின்று ஜெபிக்கவும் மனிதர்கள் தேவை. தேவன் ஜெபிக்கிற மனிதர்களுக்காகக் காத்திருக்கிறார், அவரோடு பேசுகிற (ஜெபிக்கிற) மனிதர்களை விரும்புகிறார்.

பரலோகத்தின் காரியங்களை பூலோகத்தில் தெரிவிக்க, அவர் விரும்புகிறதை நடபிக்க, அழியும் ஜனங்களுக்காக திறப்பிலே நிற்க ஜெபிக்கிற மனிதர்கள் தேவனுக்கு தேவை. ஜெபிப்பவர்கள் இந்த உலகத்தில் தேவனுக்கான வேலைகளைச் செய்கிறவர்கள். ஜெபமே எல்லாவற்றிற்கும் முதல்படி. எனவே முதலாவது ஜெபிக்க ஆரம்பிப்போம் கர்த்தர் நம்மை பயன்படுத்துவார், ஆசீர்வதிப்பார், ஆமேன்.


Article by

**MR. RAJESH ANBU**

Men's Fellowship



# உபவாசம்

**2. தீர்மானங்கள் எடுப்பதற்கான வழிகாட்டுதல் –** அப்போஸ்தலர்கள் முக்கிய முடிவுகள் எடுக்கும் முன் உபவாசம் இருந்து ஜெபித்தனர் (அப்போஸ்தலர் 13:2—3).

**3. பாவங்களை ஒப்புக்கொடுத்து மனமாறுதல்–** நினிவே மக்கள் உபவாசித்து மனமாறினர் (யோனா 3:5—10).

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் திருநாளுக்கு முன்பு 6 ஞாயிற்றுக்கிழமைகள் நீங்கலாக உள்ள 40 நாட்கள் "லெந்து நாட்கள்" அல்லது "தவக்காலம்" என திருச்சபையில் அனுசரிக்கப்பட்டு வருகின்றது. இந்த லெந்து காலத்தில் கிறிஸ்தவர்களாகிய நாம் உபவாசம் இருப்பது வழக்கம். உபவாசம் என்பது ஒரு ஆன்மீக பயணமாகும். தேவனுக்கு அருகில்சென்று அவருடைய ஆலோசனையை பெற்றுக்கொள்வதற்கும், உடலாலும், ஆவியாலும் பரிசுத்தமாக இருக்கவும் உபவாசம் உதவுகிறது.

## உபவாசத்தின் முக்கியத்துவம்:

உபவாசம் என்பது உணவிலிருந்து விலகுவதை மட்டும் குறிக்கவில்லை, அது ஆன்மீக மையமாக வாழ்க்கையை மையப்படுத்துவதற்கும், தேவனுடன் நெருக்கமாக இணைவதற்கும் உதவுகிறது. வேதத்தில், உபவாசம் பல்வேறு இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது:

1. **தவப்பாடுகளுக்கு மத்தியிலும் தேவனை நாடுதல் –** தாவீது உபவாசித்து தேவனைத் தேடியது (2 சாமுவேல் 12:16).

**4. ஆவிக்குரிய பலம் பெறுதல் –** இயேசு கிறிஸ்து தன் ஊழியத்தை தொடங்குவதற்கு முன் 40 நாட்கள் உபவாசம் இருந்து ஜெபித்தார் (மத் 4:2).

நாம் உபவாசம் இருக்கும்போது, அதிக நேரம் ஜெபத்திலும், தேவ வசனத்திலும் செலவிட வேண்டும். உலக விஷயங்களைத் தவிர்த்து தேவனின் பாதத்தில் இருப்பது அவசியம். உணவை மட்டும் தவிர்ப்பது போதாது, மனதிலும் தூய்மையாக இருக்க வேண்டும்.

## உபவாசத்தின் ஆசீர்வாதங்கள்:

- தேவனின் அருகாமை அதிகரிக்கும்.
- ஆவிக்குரிய ஞானம் மற்றும் அறிவு பெறலாம்.
- உடலாலும், மனதாலும் சுத்தமடையலாம்.
- ஜெபங்களுக்கு பதில் கிடைக்கும்.

உபவாசம் என்பது உணவை தவிர்ப்பதற்காக மட்டுமல்ல, தேவனை அணுகி, அவருடைய ஆசீர்வாதங்களை பெறுவதற்கும் ஆகும். ஜெயன் என்பவர் ஒரு சிறிய கிராமத்தில் விவசாயியாக இருந்தார். அவர் மிகவும் நம்பிக்கையுடன் தேவனை தேடுபவர். ஆனால், அவருடைய குடும்பம்

கடினமான சூழ்நிலையை எதிர்கொண்டது. கடுமையான வறட்சி காரணமாக விளைச்சல் குன்றியது, கடன் அதிகரித்தது, வீட்டில் உணவிற்கே பிரச்சனை ஏற்பட்டு விட்டது.

ஒருநாள், ஜெயனின் மகள் ஆனந்தி, "அப்பா, நாம் என்ன செய்வது? நம்முடைய நிலைமை மிக மோசமாக இருக்கிறது," என்று கவலையுடன் கேட்டாள். ஜெயன் புன்னகையுடன், "கண்கள் மனிதரிடமும், சூழ்நிலையிடமும் போகக் கூடாது. நாம் தேவனிடம் உபவாசம் இருந்து ஜெபிக்கலாம். அவர் நிச்சயமாக பதில் அளிப்பார்," என்றார்.

அந்த வாரம், ஜெயன் மற்றும் அவரது குடும்பத்தினர் மூன்று நாட்கள் உபவாசம் இருந்து ஜெபித்தனர்.


மூன்றாவது நாளில், கிராமத்திற்குள் ஒரு பெரிய வர்த்தகர் வந்தார். அவர் ஜெயனின் நிலத்தை பார்த்துவிட்டு, "இந்த நிலத்தில் நான் ஓராண்டு விவசாயம் செய்ய விரும்புகிறேன். நீங்கள் எனக்கு உதவுவீர்களா? அதற்காக நல்ல தொகை சம்பளம் தருகிறேன்," என்றார்.

ஜெயன் மகிழ்ச்சியுடன் உடன்பட்டார். அவருடைய நிலைமையும், குடும்ப வாழ்க்கையும் மாறியது. அவர் தேவனின் அன்பை எண்ணி அவருக்கு நன்றி செலுத்தினார். யாக்கோபு 4:8–ல் சொல்லப்பட்ட படி தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். உபவாசத்தின் மூலம் தேவனின் அருளும், ஆவிக்குரிய பரிபூரணமும் நம் வாழ்க்கையில் பெருகட்டும். ஆமென்!

Article by

## MRS. SHALY MELBIN

Women's Fellowship






*"என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன். அதை ஒருவனும் பூட்ட மாட்டான்" - வெளி 3:8.*

கந்தமால் பகுதியில் கிறிஸ்தவர்கள் மத தீவிரவாதிகளால் தாக்கப்பட்டனர் அநேகர் தங்கள் வீடுகளை விட்டு காடுகளில் குடியேறினர். அநேகர் துன்பப்படுத்தப்பட்டனர். அதில் ஒரு விசுவாசம் உள்ள மகனைப் பிடித்து இயேசுவை மறுதலிக்கச் சொல்லி அரைகுறை ஆடையுடன் கட்டி வைத்து சித்திரவதை செய்துள்ளார்கள். அந்த துன்பத்தின் மத்தியிலும் அவன் இயேசுவை மறுதலிக்கவில்லை. அருகில் அவரது மனைவி கதறி அழுது கொண்டிருந்திருக்கிறாள்,அந்த மனிதன் பெலன் குன்றி மரிக்கும் நிலைக்கு வந்து விட்டார். இரத்தம் எல்லாம் வடிந்தது, கடைசி நேரத்தில் தன் மனைவியை பார்த்து மரிக்கப் போகிறேன் நீயும் இயேசுவை மறுதலித்து விடாதே பரலோகத்தில் சந்திப்போம் என்று சொல்லி கண்களை மூடினார்.

நாம் ஆராதிக்கிற தேவன் யார்? தாவீதின் திறவுகோலை உடையவர். ஒருவரும் பூட்டக்கூடாத படிக்கு திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக் கூடாதபடிக்கு பூட்டுகிறவருமாய் இருக்கிறார் என்ற வெளி 3:8 வசனத்தின் படி அனைவருக்கும் திறந்த வாசலை வைத்திருக்கிறார் என்று பார்ப்போம். இக்கட்டான சூழ்நிலையிலும், வியாதி, துன்பம், வேதனை போன்ற பெலனே இல்லாத நிலையிலும் கர்த்தருடைய நாமத்தை உறுதியாய் பற்றிக்கொண்டு கர்த்தருக்குள் நிற்பவர்களே, எத்தனைப் பாடுகள் வந்தாலும் மரண பரியந்தம் கர்த்தருக்காய் வாழ்பவர்கள். இவர்களுக்காகத் தான் கர்த்தர் திறந்த வாசலை வைத்திருக்கிறார், ஒருவரும் பூட்ட முடியாது.

நமக்காக யாரும் பூட்டக்கூடாத திறந்த வாசலை வைக்க வேண்டுமானால், நமக்கு வரும் கஷ்டங்கள், பாடுகள், உபத்திரவத்தின் போது முறு முறுக்காமல் பொறுமையோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். *"இதோ பொறுமையிருக்கிறவர்களைப் பாக்கியவான்க-ளென்கிறோமே; யோபின் பொறுமையைக் குறித்து கேள்விப்பட்டிருக்கிறீர்கள், கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள். கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறாரே"* என்று யாக்கோபு 5:11-இல் கூறுகிறது. எல்லா சூழ்நிலையிலும் நாம் எப்படி இருக்கிறோம் என்று ஆராய்ந்து பார்த்து, கர்த்தருக்குள் உறுதியாய் பெலன் கொண்டு நிலைத்திருப்போம். இப்படி கர்த்தருக்கு பயந்து, வேதத்தை வாசித்து, கைக்கொள்ளுகிறவர்களாக உபத்திரவங்களை பொறுமையோடு சகிக்கும் போது கர்த்தர் தாமே நிச்சயமாக திறந்த வாசலைத் தருவார்.

*"பாடுகளைச் சகித்தல் பரலோகத்திற்கு திறந்த வாசல்"*

Article by

MRS. SHERRIN VERSLIN BENNY

Youth Fellowship

# BREAKING FREE

## THE COURAGE TO LET GO AND SOAR

Once upon a time, a king had two eagles, which were known for their majestic beauty and strength. He prized them above all else, treating them with the finest care, ensuring they were given the best food, and housed in a luxurious aviary.

One day, the king decided to take the eagles out to see how they would behave in the wild. He released the birds, but while one soared gracefully through the sky, the other went and sat on a branch of a tree. The king was puzzled and ordered his men to capture the eagle that refused to fly. He gave him special training and tried his best to make him fly but it was struck to its branch.

The king, determined to solve this problem, called upon his wisest advisors. They advised him to bring a farmer from the same place where they have bought the eagle , to see if the farmer could train the eagle and make it fly.

Next day, when the king saw through his window , he was very surprised to see both eagles were flying high in the sky . He called the farmer and asked him, "what did he do to make the eagle fly high ? It did not fly all these days with so much training and techniques. What is the secret behind this ?? ". The farmer replied , "I didn't do anything to the eagle but just cut the branch and the eagle started to fly high".

Today , in our daily lives , the branches are cut not to make us fall but to make us fly high. Today , most of us are sitting in the same place. Sitting in the same branch very comfortably and failing to fly high. Many a times or quite often these branches hold us to the grounds and stop us from making us fly .

Today, my dear friends, if you want to fly, some branches need to be cut down. Many a times our branches are being cut down and foundation is shaken because not to knock us down but to fly high. It is time to fly from the branches which you are sitting for a long time.

*God bless you*

Article by

*Mrs. Iswarya Obed*

"But those who hope in the Lord will renew their strength. They will soar on wings like eagles; they will run and not grow weary, they will walk and not be faint."
Isaiah 40:31 (NIV)



# இயேசுவின் சீடன் அந்திரேயா

அந்திரேயா இயேசுவின் பன்னிரண்டு திருத்தூதர்களில் முதலில் இயேசுவோடு இணைந்தவர். முதலில் இவர் திருமுழுக்கு யோவானின் போதனைகளினால் ஈர்க்கப்பட்டு அவர் தான் மேசியா என்னும் எண்ணத்தில் அவருடைய சீடரானவர். பின் திருமுழுக்கு யோவானே இயேசுவைச் சுட்டிக் காட்டி இயேசுவே உண்மையான கடவுள்" என்று சொன்னதால் இயேசுவோடு இணைந்தவர்.

அந்திரேயா கலிலேயாவிலுள்ள பெத்சாய்தா. என்னும் ஊரில் பிறந்தவர். தன் சகோதரரோடு சேர்ந்து மீன்பிடி தொழிலைச் செய்து வந்தவர். அந்திரேயாவின் சகோதரர் தான் இயேசுவின் முக்கியமான சீடரான பேதுரு. பேதுரை இவரே இயேசுவிடம் அழைத்து வந்தார். இயேசுவைப் பற்றிய நற்செய்தி அறிவித்தலை அவர் வீட்டிலிருந்து துவங்கியிருக்கிறார்.

இயேசுவோடு இணைந்து பயணித்தாலும், இவரைப் பற்றிய குறிப்புகள் விவிலியத்தில் அதிகம் குறிப்பிடப்படவில்லை. உலகத்தின் முடிவு நாளுக்குரிய அடையாளங்களை இயேசு விளக்கிய நான்கு சீடர்களில் இவரும் ஒருவர். இயேசு "ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் ஐயாயிரம் பேருக்குப் பகிர்ந்து அளிப்பதற்குக் காரணமான சிறுவனை அழைத்து வந்தவர்" இவர். இதுபோல் சில குறிப்புகளே உள்ளன.

இயேசு இறந்து, உயிர்த்தபின் பரிசுத்த ஆவியை சீடர்களுக்கு வழங்கினார். அதுவரை அச்சத்துடன் இருந்த சீடர்கள், அதன் பின் நற்செய்தி அறிவித்தலைத் துணிச்சலுடன் துவங்கினார்கள். அவர்களில் அந்திரேயாவும் ஒருவர்.

அந்திரேயா பணிசெய்யச் சென்ற இடம் இன்றைய ரஷ்யா!

ஜார்ஜியாவிலுள்ள காக்கசீய மலையடிவாரத்தில் அந்திரேயாவின் பணி ஆரம்பமானது. சில காலம்

பணியாற்றியபின் அங்கிருந்து பைசாண்டியம் (இஸ்தான்புல்) சென்றார். அங்கே அவருக்கு மிகப்பெரிய சவால்கள் காத்திருந்தன. மக்கள் யாரும் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை.

மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள் என்று அந்திரேயா முழங்கினார். அரசாங்கம் அவரை சிறையில் அடைத்தது, மிரட்டியது பின்னர் விடுவித்தது.

வெளிவந்த அவர், 'இயேசு நேற்றும், இன்றும் என்றும் மாறாதவர் என்று முழங்கினார். அவரை மக்கள் கல்லால் எறிந்தார்கள்.

அவர் கிரீஸ் நாட்டிற்குப் பயணம் செய்து பட்ரேஸ் என்னும் நகரை வந்தடைந்தார். பலரைக் குணமாக்கினார். யாரைக் குணமாக்கினாலும், 'இயேசு உனக்குச் சுகமளித்தார் என்று சொன்னார். எனவே இயேசுவின் பெயர் அங்கே பரவத் துவங்கியது.

அங்கிருந்த ரோம ஆளுநர் ஏஜியேட்ஸ்ன் மனைவி மேக்ஸ்மில்லாவை சுகப்படுத்த. அவர் கிறிஸ்துவை நம்பினார். ஏஜியேட்ஸ் கோபமடைந்தார்.

ஆனால் அவருடைய சகோதரர் ஸ்ராட்டோக்லிஸ் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினார். ஏஜியேட்டஸ் கடும் கோபமடைந்தார். அந்திரேயாவை அழைத்து கடுமையாய் எச்சரித்தான். ஆனால் அந்திரேயா இயேசுவைப் பற்றிய போதனையிலிருந்து பின் வாங்கவில்லை.

இதனால் எதிர்ப்பாளர்கள் அவரை அடித்து, பற்களை உடைத்து, விரல்களை வெட்டி மலைச்சரிவில் எறிந்தார்கள். அங்கே இயேசு அவருக்குத் தரிசனமாகி ஆச்சரியமான சுகம் கொடுத்தார்.

மறுநாள் மக்கள் முன்னிலையில் சாதாரணமாய் வந்து நின்ற அந்திரேயாவைக் கண்டவர்கள் மிரண்டனர். அந்திரேயா அந்த சந்தர்ப்பத்தை இயேசுவைப் போதிக்கக் கிடைத்த வாய்ப்பாக்கிக் கொண்டார். ஒருமுறை இறந்த ஒருவருக்கு உயிர்கொடுக்க அவருடைய பெயர் காட்டுத் தீயாய்ப் பரவியது.

ஏஜியேட்ஸ் அந்திரேயாவுக்கு சிலுவை மரணம் தீர்ப்பளித்தார். எக்ஸ் வடிவ சிலுவையில் தலைகீழாய் அறையப்பட வேண்டும் என்பது தீர்ப்பு. அப்போது தான் அதிக வலி, அதிக நேரம் வலி என்பது அவனுடைய கணக்கு.

அந்திரேயா சிலுவையில் அறையப்பட்டார். சுமார் இருபத்தையாயிரம் மக்கள் சிலுவையைச் சூழ்ந்து கொண்டார்கள். சிலுவையில் இயேசு அந்திரேயாவுக்கு காட்சியளித்தார். சிலுவையில்

தொங்கிய அந்திரேயா விடாமல் மக்களுக்குப் போதித்துக் கொண்டே இருந்தார். மன்னன் அந்திரேயாவை சிலுவையிலிருந்து இறக்கி விட நினைத்தான். அந்திரேயா ஒத்துக் கொள்ளவில்லை. "இயேசுவைப் பார்த்துவிட்டேன் இனிமேல் புவி வாழ்க்கை தேவையில்லை" என்று பிடிவாதம் பிடித்தார்.

திடீரென்று வானத்திலிருந்து ஒரு ஒளி வெள்ளம் பாய்ந்து வந்து அந்திரேயாவை நனைத்தது. அரை மணி நேரம் அந்த ஒளி அந்திரேயா மீது பாய்ந்து கொண்டே இருந்தது. அந்த ஒளி விலகியபோது அந்திரேயா இறந்து போயிருந்தார். அந்திரேயா இறந்தபோது காலம் கிபி 69, நவம்பர் முப்பதாம் நாள். ஏஜியேட்டசின் மனைவி மேக்ஸ்மில்லாவும், அவரது சகோதரன் ஸ்ராட் டோகி லிஸ்ம் அந்திரேயாவை சிலுவையிலிருந்து இறக்கி அடக்கம் செய்தார்கள்.

மக்களின் மனமாற்றம் மன்னன் ஏஜியேட்டசை வருத்தியது. தவறு செய்துவிட்டோம் என்ற குற்றஉணர்வினால், தற்கொலை செய்து கொண்டான்.

கி.பி 357 ம் ஆண்டு கான்ஸ்டண்டன் மன்னன் அந்திரேயாவில் உடல் எலும்புகளை மட்டும் எடுத்து பைசாண்டியத்திலுள்ள தூய அப்போஸ்தலர் தேவாலயத்தில் வைத்தார். அவருடைய உடல் எலும்புகளின் ஒருபாகம் ஸ்காட்லாந்து தேசத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

அவர் ஸ்காட்லாந்து தேசத்தின் புனித தந்தையாகப் போற்றப்படுகிறார். ஸ்காட்லாந்தும், இங்கிலாந்தும் இணைந்தபின், இங்கிலாந்து தேசக் கொடி அவருடைய X வடிவ சிலையை தன்னுடைய தேசியக் கொடியில் பொறித்து பெருமைப்படுத்தியது.

Article by

**MRS. AJINSHA**



# "IF GOD IS FOR US WHO CAN BE AGAINST US?"

As humans many a times we lose heart or let the negative emotions overcome us, especially in this world which is overflowing with jealousy, grudge and betrayal.

We always feel that there is a threat around us. Among the relatives, within the workplace, with the neighborhood and sometimes even at the worship places.

Too many trials and hardships to bear…

Do you feel lonely?

Do you feel the threat always?

Are people raising against you?

Do you feel cornered all around?

Have you ever thought to fight back or curse them?

Are you confused and shattered?

Whatever it is……….

Irrespective of the situation, place, support sources, threats, hardships, shame and burdens, we have a **RAY OF HOPE – THAT'S JESUS CHRIST.**

When the situation turns worst and hopeless – Praise and Pray

There are many examples in Bible who faced the worst situation, but God stood for them.

- King David fled from Absalom (his own son) to save his life.
- Old Testament Joseph – thrown in the prison for staying righteous
- Prophet Elijah threatened by the king's wife Jezebel
- Daniel in the Lion's Den
- The three friends of Daniel – thrown into the furnace
- Paul underwent many torments

Just like how God stood for the above characters in Bible, our faithful one is still holding you safe and will fight for you.

Stay calm, you don't have to fight back or prove yourself to anyone. Your boss may corner you; your colleagues may suppress you; relatives may hurt you; your spouse may mistreat you.

A large group of people may be against you, but our MOST POWERFUL GOD is always with you, and HE will turn the situation in favor for you.

**All we need to do is patiently pray for the situation and people.**

**The suffering and intimidation may be painful, but the result would be awesome and worthy.**







CHURCH PICNIC - 2025





# 2 KINGS 1- 13

## 2 இராஜாக்கள் 1–13

MARCH '25 - QUESTIONS

1. புத்திரனில்லாத ராஜா யார்?
2. கரடிகள் எத்தனைப் பேரை பீறிப் போட்டது?
3. தண்ணீர் இரத்தம் போல் யாருக்கு காணப்பட்டது?
4. ஏழு தரம் தும்மி கண் விழித்தது யார்?
5. இரண்டு பொதி மண்ணைக் கேட்டது யார்?
6. தண்ணீரில் மிதந்த உலோகம் என்ன?
7. ஒரு சேக்கலுக்கு விற்கப்பட்டவை எவை?
8. எருசலேமில் ஒரே வருஷம் அரசாட்சி செய்தவன் யார்?
9. யெகூவின் சேனாபதி யார்?
10. பாகாலை அழித்துப் போட்டது யார்?
11. துரோகம் துரோகம் என்று கூவினது யார்?
12. வீட்டில் கொல்லப்பட்ட ராஜா யார்?
13. யாருடைய கல்லறையின் மேல் போடப்பட்ட பிரேதம் உயிர் பெற்றது?

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 15ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

### பிப்ரவரி-2025 மாத வினாவிற்கான விடைகள்

1. இராஜா 12:18,
2. இராஜா 13:14,
3. இராஜா 14:25,
4. இராஜா 15:22,
5. இராஜா 16:34,
6. இராஜா 18:38,
7. இராஜா 17:12,
8. இராஜா 19:19,
9. இராஜா 20:30,
10. இராஜா 21:23,
11. இராஜா 22:48.


### டிசம்பர்-2025 மாத வினாவிற்கான விடைகள் எழுதியவர்கள்

திருமதி.ஜெனிபர் பால்,
திருமதி.பிப்ளின் நெல்சன்,
திருமதி.பியூலா ஏசுராஜ்,
திருமதி.ஜோனிஸ் ஹெர்சல்,
திருமதி.ரேனா ஜோஸ்,
திருமதி.ரோஸ் மேரி,
செல்வி.அஜின்ஷா,
திருமதி.ராதிகா செல்வக்குமார்

# FEBRUARY WINNERS

## KIDS COLORING


- Hazel Hartlyn
- Jesil Bernice
- Elfina
- Efrain
- Smyrna Syntyche
- Shiphra Shalom
- Johanna Jose
- Iniyal
- Jemima Ashok




## WORD SEARCH


- Hazel Hartlyn
- Jesil Bernice
- Elfina
- Efrain
- Smyrna Syntyche
- Joshua Jose
- Iniyan Immanuel
- Sherinsha
- Avisha





## FIND THE WAY

- Hazel Hartlyn
- Jesil Bernice
- Elfina
- Efrain
- Smyrna Syntyche
- Iniyan Immanuel



## CROSS WORD

- Elfina
- Efrain
- Iniyan Immanuel
- Sherinsha
- Avisha








CHURCH PICNIC - 2025








CHILDREN
BIBLE SCHOOL
-2025
CLASS: KINDER
By :
Mrs. Sherrin Verslin Benny
Mrs. Mona Prem Jenifer
Ahoy!
Jesus loves me
Jesus loves me

Name:

Date:

Kids Coloring


# WHAT IS JESUS CARRYING?



Name : ............................................................

# "I AM" THE GOOD SHEPHERD

Protect the sheep before the enemy reaches them.



# Lent

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Y | A | D | S | E | N | D | E | W | H | S | A | H | B | J | E | S | I | H | N | V | T | W | F |
| S | T | H | P | I | E | E | V | S | H | L | E | H | C | C | H | Y | C | Q | N | Q | H | C | D |
| R | T | V | L | Q | W | F | T | G | A | X | J | R | A | F | O | T | K | E | K | Y | X | S | S |
| S | J | P | S | M | J | O | U | R | N | E | Y | V | A | D | B | B | N | K | M | A | D | Z | F |
| K | U | A | K | C | H | O | S | P | T | N | E | P | E | R | E | K | U | O | E | L | E | A | K |
| K | F | S | F | J | S | A | N | B | S | R | S | Q | Y | I | U | V | H | P | S | M | S | S | V |
| A | A | S | X | V | J | U | E | H | V | K | N | Q | V | J | Q | L | U | Q | O | S | S | L | L |
| M | S | I | M | J | G | L | U | W | V | D | G | N | L | W | J | B | G | R | P | G | T | W | Q |
| Y | T | O | X | N | W | V | H | B | C | G | Z | U | G | Y | P | A | O | E | R | I | R | R | H |
| M | I | N | F | A | O | P | P | S | J | E | S | U | S | O | F | W | B | Y | U | V | E | E | W |
| Z | N | T | T | V | Q | H | I | T | G | U | R | B | W | A | F | S | T | A | P | I | N | C | W |
| I | G | L | Z | K | X | H | P | E | S | G | K | N | X | W | Y | S | M | R | V | N | G | I | F |
| P | J | S | R | F | C | B | V | J | Y | B | J | V | A | G | R | O | U | P | T | G | T | F | H |
| C | T | X | F | C | L | W | U | D | A | H | N | J | G | P | J | R | N | W | I | M | H | A | T |
| Y | P | C | L | G | A | M | F | C | D | P | J | H | R | G | O | C | B | U | Y | I | H | R | N |
| A | A | K | L | X | R | B | Q | F | Y | H | W | N | I | S | R | F | I | G | Z | A | S | C | S |
| D | O | N | X | L | I | N | O | I | T | C | E | L | F | E | R | O | L | F | A | P | Z | A | D |
| N | A | N | A | H | T | I | O | J | R | S | U | K | E | E | W | Y | L | O | H | Y | P | S | Z |
| U | K | C | K | M | Y | G | V | G | O | O | I | P | I | S | F | J | L | M | S | I | G | Z | U |
| S | X | Z | J | H | U | Y | X | G | F | Y | A | D | N | U | S | R | E | T | S | A | E | U | D |
| M | E | F | R | Y | V | B | R | M | G | W | N | K | X | K | J | U | C | E | T | E | D | Q | T |
| L | T | E | N | K | C | N | V | N | O | I | T | C | E | R | R | U | S | E | R | V | A | D | Y |
| A | N | F | M | A | X | D | O | E | J | D | S | D | C | B | E | L | B | I | B | B | N | H | Y |
| P | P | P | X | N | M | W | J | Z | U | X | U | J | W | E | F | Z | H | Y | N | Z | E | K | B |

easter sunday
reflection
sacrafice
clarity
Prayer
sin

ash wednesday
forty days
strength
journey
Bible


resurrection
almsgiving
purpose
fasting
Jesus

Palm Sunday
Holy Week
passion
Repent
cross

Name : ..............................................................

WORD SEARCH

**Name :** ....................................................................



**ACROSS**

1 Named for a tax collector

5 1st and 2nd ___ are named for Jesus' main disciple

9 Rhymes with "hark"

10 Named for Jesus' brother

Ephesus

3 Letter to Philippi

4 Letter to Colosse

6 Sixth

7 Paul's letters to the ___

8 Last

11 Sounds like a chopping tool

13 Rhymes with "duke"

12 1st and 2nd ___

14 Fourth Gospel

15 Book Named in a Beatles song?

16 1st, 2nd and 3rd ___

**DOWN**

2 Letter to

# MARCH - 2025

| | |
|---|---|
| 01-MARCH | Mr. David Livingston |
| 02-MARCH | Mrs. Shaly Jesie |
| 02-MARCH | Ms. T.P. Vamshi Juana D/o Mr. Thanu Lingam |
| 03-MARCH | Mrs. Yesubai |
| 03-MARCH | Mrs. M. Subha Alvin |
| 03-MARCH | Mr. G. Verslin Benny |
| 04-MARCH | Ms. Samantha Baskar D/o Mr. Bhaskar Rajaram |
| 04-MARCH | Mr. K.G. Libin Raj |
| 06-MARCH | Mr. Derick Gasbath Joy |
| 06-MARCH | Mr. Hebin Jose George |
| 06-MARCH | Mr. Arul Raj S/o Mr. Selva Nayagam |
| 12-MARCH | Mr. J. Jolly Abraham |
| 13-MARCH | Master. J. Joshua S/o Mr. Jose Selva Kumar |
| 14-MARCH | Mrs. Radhika Grace Selva Kumar |
| 15-MARCH | Mrs. Eben A. Prasad |
| 17-MARCH | Master. D.P. Joseph Jovin |
| 17-MARCH | Mrs. R. Jackulin Milka |
| 19-MARCH | Mr. A.S. Kannan |
| 19-MARCH | Mr. John Prabakaran |
| 20-MARCH | Mrs. Catherine Judith Franklin |
| 23-MARCH | Ms. U.S. Gabrilin Shasmitha D/o Mr. Ujin Raj |
| 23-MARCH | Mrs. Aji Kumari |

*"For through wisdom your days will be many, and years will be added to your life."* *-proverbs 9:11*

| | |
|---|---|
| 23-MARCH | Mrs. Velanganni |
| 24-MARCH | Master. Ruban S/o Mr. Selva Nayagam |
| 24-MARCH | Mr. P. Lifin Raj |
| 25-MARCH | Mrs. Rebecca |
| 25-MARCH | Mrs. B. Swetha |
| 27-MARCH | Master. Johan Sanjo S/o Mr. Belfer John Sigamony |
| 27-MARCH | Master. Jeroan Stanly S/o Mr. Stanly. G. |
| 30-MARCH | Ms. Ajin Shah D/o Mr. Selvistor Solomon |
| 30-MARCH | Master. D.L. Derin S/o Mr. David Livingston |
| 31-MARCH | Ms. Annlin Sophia Nelson D/o Mr. Nelson Sopitha Raj |
| 31-MARCH | Mr. David Livingston S/o Mr. Livingston Samuel |
| 31-MARCH | Ms. S. Steffi D/o Mrs. Indira Israel |




| | |
|---|---|
| 07- MARCH | Mr. Ujin Raj<br>&<br>Mrs. Sangeetha |

*"Two are better than one, because they have a good return for their labor: If either of them falls down, one can help the other up."*

-Ecclesiastes 4:9-10

# CHURCH PICNIC- 2025

































EDITOR
THE PRESBYTER – CSI TAMIL PARISH-ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348
Email: csitcalain@gmail.com
Web: csitamilparishalain.org

STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY

# Salt and Light

YOU ARE THE SALT OF THE EARTH. BUT IF THE SALT LOSES ITS SALTINESS, HOW CAN IT BE MADE SALTY AGAIN? IT IS NO LONGER GOOD FOR ANYTHING, EXCEPT TO BE THROWN OUT AND TRAMPLED UNDERFOOT.

YOU ARE THE LIGHT OF THE WORLD. A TOWN BUILT ON A HILL CANNOT BE HIDDEN.

NEITHER DO PEOPLE LIGHT A LAMP AND PUT IT UNDER A BOWL. INSTEAD THEY PUT IT ON ITS STAND, AND IT GIVES LIGHT TO EVERYONE IN THE HOUSE.

IN THE SAME WAY, LET YOUR LIGHT SHINE BEFORE OTHERS, THAT THEY MAY SEE YOUR GOOD DEEDS AND GLORIFY YOUR FATHER IN HEAVEN.

*Matthew 5:13-16*